**SC. No. 51 /2018**

P.W.7 - ஜமால்

தேதி: 05.11.2020.

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து காவல் நிலையத்தில் வைத்து வாக்குமூலம் வாங்கினார்கள். முன் விசாரணையில் நான் சொல்லியுள்ள சங்கதிகளை தற்போது தான் நீதிமன்றத்தில் முதன் முதலில் சொல்லியிருக்கிறேன் என்றால்சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. கேள்விப்பட்டு தான் தெரியும். போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் தான் முன் விசாரணையில் சாட்சியம்அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்தவர் என்னிடம் சொன்னதை வைத்து சாட்சியம் அளிக்கிறேன். நான் முன் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு என்றும் நான் கேள்விபட்டது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.